**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**C.C. 168/2023**
**Prosecution Witness : 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ஞானசேகரன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. முனியாண்டி** | **Calling** | : | **மில் வேலை** |
| **Village** | : | **வேடசந்தூர்** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **47** |
| | | | **Dated** | : | **04.02.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜர்.**

அ.சா. 4 (பட்டியல் சாட்சி 7), **திரு. ஞானசேகரன்**. ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து மில்லில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் எதிரி மணிகண்டன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் அ.சா.ஆ. 1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகின்றன**. சுமார் 4 வருடங்களுக்கு முன்பாக தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் இருந்து 10 அடி தூரத்தில் உள்ள இடத்தில், திருட்டு வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்கள். விசாரிணைக்கு வந்ததற்காக சாட்சி கையொப்பம்

கேட்டார்கள், நான் செய்து கொடுத்தேன். என்னுடன் ஜான் பீட்டர் என்பவரும் கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

போலீசார் கேட்டுக் கொண்டதற்காகத்தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். காவல் நிலைத்தில் இருந்து 10 அடி தூரத்தில் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் காவல் நிலையத்தில் வைத்து போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்து கொடுத்துவிட்டு, தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 04.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.02.04 18:09:28 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**C.C. 168/2023**
**Prosecution Witness : 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ஜான்பீட்டர்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. அற்புதம்** | **Calling** | : | **மில் வேலை** |
| **Village** | : | **தாடிக்கொம்பு** | **Religion** | : | **கிறிஸ்துவர்** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **50** |
| | | | **Dated** | : | **04.02.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜர்.**

அ.சா. 5 (பட்டியல் சாட்சி 8), **திரு. ஜான்பீட்டர்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து மில்லில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியாது. என்னிடம் காட்டப்படும் எதிரி மணிகண்டன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ. 3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகின்றன**. சுமார் 2 வருடங்களுக்கு முன்பாக தாடிக்கொம்பில் வைத்து, திருட்டு வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்கள். விசாரிணைக்கு வந்ததற்காக சாட்சி கையொப்பம்

கேட்டார்கள், நான் செய்து கொடுத்தேன். என்னுடன் ஞானசேகர் என்பவரும் கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

நான் கையெழுத்த செய்த தாளில் என்ன எழுதப்பட்டு இருந்தது என்றால் சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதற்காகத்தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். காவல் நிலைத்தில் இருந்து 10 அடி தூரத்தில் தான் கையொப்பம் செய்தேன் என்றால் இருக்கலாம். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் காவல் நிலையத்தில் வைத்து போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன் என்றால் எனக்கு நினைவில்லை. போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்து கொடுத்துவிட்டு, தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**Taken down by me/before me in open court on 04.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.**

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.02.04 18:09:34 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**